# ஊழல் ஊழல் எல்லாம் ஊழல் மயம்

Regd: No. M. 5458 Phone No. 4502:

விலை அரை அணா இலங்கை 5 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 22—12—50 | மணி 20

## காங்கிரஸ்காரர்கள் ஆட்சி நடைபெறும் விதம்

—(o)—

## நிறைவேற்றப்படும் சட்டங்கள் நடைமுறையில் ஊழலாகிவிடுகின்றது

காங்கிரஸ்காரர்கள் பதவி ஏற்பதற்கு முன், இந்த நாட்டைப் பொன்னுடாக்கப் போவதாகச் சொல்லித் திரிந்தனர். ஒரு காங்கிரஸ் பிரகஸ்பதி மழை பெய்யாவிட்டால்கூடப் பகீரதனைப் போன்று நாட்டில் எங்கும் மழை பெய்விக்குமாறு செய்யத் தம்மிடம் மந்திர சக்தி இருக்கிறதென்று அறியாமை மிக்க மக்களிடையே தேர்தல் காலத்தில் புளுகித் தொலைத்தார்.

ஆனால், காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு வந்துவிட்ட பிறகு, அதற்கு முன்னிருந்த நிலைமையில் நிற்பதற்குக்கூட முடியாமல் நாடு மிகக் கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டது. முன்னிருந்த நிலையை விட முன்னேற்றம் அடையாவிட்டாலும் பின்னேற்றமாவது இல்லாமலிருக்கலாம். ஆனால் எந்த ஆட்சியிலும் இல்லாத அளவு ஊழல்கள் இன்று நாட்டில் நிறைந்துவிட்டன.

காங்கிரஸ்காரர்கள் நிர்வாகத் திறமையற்றவர்களாயிருப்பதாலும் பதவிவெறி தலைக்கேறியவர்களாயிருப்பதாலும்தான் நம்நாட்டு நிலை இவ்வளவு கேவலத்திற்கு வந்துவிட்டது. மேலும் பண ஆசை யாரைவிட்டது! முற்றும் துறந்த முனிவர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்ட அரவிந்தர், ரமணர் போன்றவர்களே ஏராளமாகச் சொத்துத் திரட்டிவைத்திருந்தனர் என்றால், சாதாரண காங்கிரஸ் தோழர்களுக்குச் சொல்லவேண்டுமோ?

எனவே, இவர்கள் ஆட்சிப் பீடத்திலமர்ந்தவுடன், ஒன்றேனும் நல்லமுறையில் நடைபெறாமல் எல்லாம் ஊழல்கள் மயமாகிவிட்டன.

"சங்கர்ஸ்வீக்லி"யில் சில ஊழல்கள் ஒரு பட்டியலாகத் திரட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1. சர்க்கரை ஊழல்
2. சணல் வணிக ஊழல்
3. நெய் ஊழல்
4. வீட்டுத்திட்ட ஊழல்
5. உணவுப் பிரச்னை ஊழல்
6. இறக்குமதித் திட்ட ஊழல்
7. மூலாதார உரிமைப் பிரச்னை ஊழல்
8. குடியரசுப் பிரச்னை ஊழல்
9. மாகாண அரசுகள் பிரச்னை ஊழல்
10. கம்யூனிசக் கட்சி அடக்குமுறை ஊழல்
11. சோஷலிஸக் கட்சி அடக்குமுறை ஊழல்
12. கிரிக்கெட் ஊழல்

இவை மத்திய அரசாங்கம்பற்றியவை, இதே போன்று நம்மாகாண அரசாங்கமும் பல ஊழல்கள் நிறைந்திருக்கிறதென்பதை பிரகாசம்—காங்கிரஸ் மேலிடத்துச் சண்டை மூலமாக நன்கறியலாம்.

பொதுவாக; நூல் விநியோக ஊழல் மதுவிலக்குச் சட்ட நடைமுறை ஊழல், அரசாங்க இலாக்காக்களின் இலஞ்ச ஊழல் முதலிய பல ஊழல்கள் சென்னை அரசாங்கத்தில் பொது மக்கள் நன்கு உணரக்கூடிய நிலையில் இருக்கின்றன. நூல் விநியோக ஊழல் காரணமாக இன்று பலர் பட்டினி சாவுக்கிரையாவது கண் கூடாகத் தெரியக் கிடக்கிறது. மதுவிலக்குச் சட்ட நிறைவேற்றம் தக்கவாறு கையாளப்படவில்லை என்பதை அறிந்துகொள்ள நீதிமன்றங்களில் நடைபெறும், வழக்குகளைக் கொண்டே நன்கறியலாம்.

இவ்விதம் காங்கிரஸ்காரர்கள் ஆட்சியைச் சீர்பெற நடத்த முயற்சி செய்யாமல் நாளுக்குநாள் மேற்கொண்டு ஊழல்கள் பெருகிக் கொண்டே இருக்க விடுவதால், நாடு முன்னேற்றமடைய முடியுமா?

## சித்திரகுளம் செப்பனிட ரூ. 2000

—(:0:)—

## நகரசபைத் தலைவர் நன்கொடை

—(o)—

### நடமாடுங் கோயில்களைச் சீர்படுத்த வழியில்லையே

சென்னை மயிலாப்பூர் சித்திரக் குளத்தருகில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அமைச்சர் தோழர் பக்தவச்சலனார் தலைமை வகித்தார். அதுபோது அக்குளத்தைச்சீர்படுத்தும் குழுவினர் சென்னை மேயருக்கு வெள்ளிப் பேழை ஒன்று அளித்தனர். அதனை அன்புடன் பெற்ற மேயருக்கு தமிழ் நாட்டிலுள்ள கோவில்களும், குளங்களும் சீர்கேடு அடைந்து வருகின்றனவென்றும், நம் நாட்டு மக்கள் பண்டைப் பெரியோர் கையாண்ட முறைகளை அனுசரித்து வாரமலிருப்பதுதான் இதற்குக் காரணமென்றும், பெரியோர்கள் பின்பற்றிய முறைகளை நாம் கையாண்டால்தான், நம் கலை கோவில், குளம் அனைத்தும் சீர்பட ஏதுவாகுமென்றும் எனவே, இக் குளத்தைச் சீர்ப்படுத்த தான் நன் கொடையாக ரூபாய் 2000 அளிப்பதாகக் கூறினார்.

கோவில்களும் குளங்களும் சீர்கேடடைந்துவிட்டதென்று கண்ணீர்விட்டு ரூ 2000 நன்கொடையளிக்க முன்வந்த மேயர், சேரிகளைச் சீர்திருத்தம் செய்தே தீருவேன் என்று வீரம் பேசிய தம் வாக்குறுதியை நிறைவேற்றிவைப்பதற்காக இந்தப் பணத்தைச் செலவு செய்யலாமே.

நாட்டிலே இப்போதிருக்கும் கோயில்களும் குளங்களும்போதும். ஆனால் உழவைப் பெருக்கப் பல புதிய ஏரிகளும், கால்வாய்களும் வெட்டவும், பழைய ஏரி, கால்வாய்களை ஒழுங்கு படுத்தவும் செலவிடலாமே! வீடற்றுத் தெருச் சந்திகளை வீடுகளாகப் பயன் படுத்தும் ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டித்தர இப்பணத்தைப் பயன்படுத்திப் பிறரையும் இத்தகைய துறையில் ஈடுபடுத்தியிருக்கலாமே.

இன்னுமா கோவில்களும் குளங்களும். நடமாடுங் கோவில்களைக் கவனிக்க இந்தத் தலைவர்களுக்கு என்று ஆர்வம் பிறக்குமோ அன்றுதான் நாடு நன்னிலை பெறும், வெறும் வெள்ளிப் பேழைகளுக்கும் வாழ்த்துபசாரங்களும் புகழ் மொழிகளுக்கும் மனத்தைக் கொடுத்துவிட வேண்டாமென்று மேயருக்கும் அவர் போன்ற தலைவர்களுக்கும் பொது மக்கள் எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது.

# காஞ்சி மாநாடு

## டிசம்பர் 23, 24-தேதிகளில்

தலைவர்:—சி. பி. சிற்றரசு

திறப்பாளர்:—ஏ. வி. பி. ஆசைத்தம்பி

உபசரணை கமிட்டி தலைவர்—சி. வி. எம். அண்ணாமலை

அறிஞர் அண்ணாதுரை—கே. ஆர். ராமசாமி நடிக்கும்

சந்திரமோகன் — நீதிதேவன்மயக்கம்

நாடகங்கள் நடைபெறும்

### சமாதான வழியை இந்தியா காட்டுகிறது

டர்பன், டிச. 21—

"உண்மையானதும், நிரந்தரமாக நீடிக்கக் கூடியதுமான சமாதானம் ஏற்படும் மார்க்கத்தைத்தான் இந்தியா காட்டுகிறது" என்று காந்தியடிகளினால் துவக்கப்பட்ட "இந்தியன் ஒபினியன்" என்னும் பத்திரிகை எழுதியிருக்கிறது.

தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் முழுஅளவுக்குத் தியாகம் செய்ய முன்வர வேண்டும் என்றும் தாய்நாட்டின் உதவியை அதிகம் எதிர்பார்க்காமல் இருக்கவேண்டும் என்றும் அப்பத்திரிகை எழுதியிருக்கிறது.

# நாஞ்சில் மாநாடு

## டிசம்பர் 30, 31-தேதிகளில்

தலைவர்:—இரா: இளம்வழுதி

திறப்பாளர்:—என். எஸ். இளங்கோ

அறிஞர் அண்ணாதுரை—கே. ஆர். ராமசாமி நடிக்கும் நாடகமும் உண்டு


## கழக நடவடிக்கைகள்

சென்னை:—சுந்தரபுரம் கிராமத்தில் 10-12-50ல் தோழர் சி. கிருட்டினன் தலைமையில் கூடி இளைஞர் மன்ற நூல் நிலையம், நிறுவப்பட்டது. அதற்கு பொ. கு. குருசாமி தலைவராகவும், சி. கணேசன் துணைத் தலைவராகவும், சி. கிருட்டினன், கு. சிவஞானமூர்த்தி கூட்டுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

திருவள்ளூர்:- 18-12-50ல் புத்தாண்டிற்கான அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்க தி. மு. க. செயற்குழு கூடியது. செயலாளர் டி. ஆர். வரதன் பொருளாளர் ஆர். பாலசுந்தரம் விளம்பர உறுப்பினர் ச. நா. நீடிவப்பன். இவர்களை தேர்ந்தெடுத்த பிறகு நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

பொம்மே குப்பம் (வ. ஆ).—17-12-50ல் தி. மு. க. செயற்குழு கூட்டம் அ. இளங்கோவன் தலைமையில் கூடியது. அதுபோது செயலாளர் ரா. ராசன், துணை அமரன் பொருள் காப்பாளர் அ. வையாபுரி வி. உறு. ரா. பன்னீர்செல்வம் இவர்களைத் தேர்தெடுத்த பிறகு தீர்மானங்கள் நிறைவேற நன்றி கூறியதும் கூட்டம் இனிது முடிந்தது.

* * *

கோவை. 17-12-50ல் தி. மு. க. செயற்குழு கூட்டம் கி. வெ. முத்து தலைமையில் கூடி, ,ஆளவந்தாரும் அழிவியக்கமும்' என்ற பொருள்பற்றி பல கழகத் தோழர்கள் பேசினார்கள். செயலாளர் இராஜேஸ்வரன் நன்றி கூர கூட்டம் இனிது முடிந்தது.

* * *

ஆம்பூர்:—17-12-50ல் தி. மு. க. செயற்குழு கண்ணன் தலைமையில் கூடி உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் சி. தம்பிதுரை, துணை, இ. ராமலிங்கம், பொருள் உறுப்பினர், எம். பாண்டியன், விளம்பர உறுப்பினர் மு. குப்பன் பிறகு சி. தம்பிதுரை நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

கூறைநாடு:—10—12—50ல் என். கிட்டப்பா தலைமையில் 'வேலாயுதம் மன்றம்' நிறுவப்பட்டது. அதுபோது செயலாளர் என். கிட்டப்பா, துணை ந. அப்பாவு, பொருள் உறுப்பினர்; கோ. விராசாமி விள. உறு. வ துரைராசு. து. விள. உறு. வே. சோமசுந்தரம் இவர்களைத் தேர்தெடுத்து கழகக் கொள்கைகளை அப்படியே ஏற்று நிறைவேற்றுவதென முடிவு செய்யப்பட்டு இனிது முடிவுற்றது.

* * *

களத்தூர்: -14-12-50ல் க. பெ. பூவலிங்கம் பிள்ளை தலைமையில் தி. மு. க. செயற்குழு கூடியபோது, செயலாளர் க. கந்தசாமி துணைச் செய

## சமூக உரிமை நீதி மாநாடு

### பேரியகுளம்

27-12-50ல் நடைபெற எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்ட சமூக உரிமை நீதி மாநாட்டை ஜனவரி இறுதிக்குள் நடத்துவதென்று தேதி மாற்றப்பட்டுளது. காரணம் தேதி மாற்றுவதால் இன்னும் பல அறிஞர்களும், பத்திரிகையுலக அறிஞர்களும் கலந்துகொள்ள முடியுமென்ற காரணத்திற்காக. குறிப்பாக 'காண்டிபம்' ஆசிரியர் எஸ், எஸ். மாரிசாமி, 'பிரசண்டவிகடன்' ஆசிரியர் காரணதுரைக்கண்ணன், 'விடுதலை' ஆசிரியர் குருசாமி கலந்துகொள்ள வாய்ப்பு உண்டு. முடிவான தேதி பின்னர் தெரிவிக்கப்படும். ஜனவரி இறுதிக்குள் ஒரு தேதி முடிவு செய்யப்படும், என்று செயலாளர் இளமுருகு எழுதுகிறார்,

## ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்

லண்டன், டிச. 20—

ரஷ்யா மேற்கு வல்லரசுகளுக்கு அனுப்பிய கண்டனக் குறிப்புகளின் பயனாக ஏற்பட்ட பலன் மேற்கு வல்லரசுகள் தங்கள் முஸ்தீபுகளை தீவிரப்படுத்துவதுதான்.

ரஷ்யாவுக்கு பிரிட்டனும் பிரான்சும் கடுமையாகவே பதிலை அனுப்பி விட்டதாகத் தெரிகிறது.

பிரான்ஸ், ஆயுத சேகரிப்பு யுத்த முஸ்தீபுகள் இவைகளை ஆரம்பித்தது ரஷ்யாதான் என்று தன் பதிலில் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

---

லாளர் இரா. பெருமாள். பொருளாளர் ஞ. மயில்ராவணன் இவர்களை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது

* * *

பன்னவள்ளி (வ. ஆ.) 13-12-50 மாலை ஆர். எஸ். மணி அவர்கள் தலைமையில் தி. மு. கி. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்று உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர், ஆர். எஸ். சின்னராசு. துணைச் செயலாளர். பி. ஜி. கிருட்டினமூர்த்தி. பி. ஆர். பாண்டியன், பொருளாளர். பி. கே. இராசு. து. பொ. பி. எம். கந்தன்; விள. உறு. பி. ஜி. கணேசன், பி. ஜி. பெருமாள்.

ஜனவரி மாத இறுதிக்குள் இரா. நெடுஞ்செழியன் அவர்களைக்கொண்டு துவக்கவிழா நடத்துவதென தீர்மானித்து நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.


## இன்பவாழ்வுப் பதிப்பக வெளியீடுகள்

**கார்ல்மார்க்ஸ்** 0 12 0

எஸ். சதாசிவம்

மனித சமுதாய நல்வாழ்விற்குகந்த தத்துவம் மார்க்சீயம்தான் என்பது பல சான்றுகளுடன் இந்நூலில் விளக்கப்பட்டிருக்கிறது. அரசியல் தலைவர்கள் முதல் பாட்டாளி வரையில் அனைவரும் படிக்கவேண்டிய நூல்.

**ஏழையின் அரசியல்** 0 8 0

எஸ்.சதாசிவம்

இன்றைய அரசியல் உயரப்பரின் உல்லாச மேடையாக இருக்கிறது. அது மாறவேண்டும். அப்பொழுதுதான் எல்லா மக்களுடைய நலனும் கவனிக்கப்படும். இந்நூலில் ஏழையின் அரசியல் என்றால் என்ன? அது எப்படிக் கிடைக்கும் என்பவையெல்லாம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

வியாபாரிகளுக்கு 25% அனுப்பும் சிலவு எங்களுடையது

—: விவரங்கட்கு :—

**இன்பவாழ்வுப் பதிப்பகம்**

ஆர். எஸ். புரம்—கோயமுத்தூர்


## எதிர்ப்போக்கு

### உதவாது நமக்கு

### சமூக விரோதிகள் அணிவதே கதர்

புதுடில்லி, டிச. 20—

காந்தியார் கண்டுபிடிப்பில் ஒன்றுதான் கதர். இது ஆதிகால இந்தியநாட்டு மக்களால் கையாளப்பட்டதுதான். இது நடைமுறைக்கொவ்வாதது. செலவும், உழைப்பும் அதிகம். உற்பத்திக் குறைவு. மனித சுயதேவையைப் பூர்த்தி செய்ய முடியாதது என்பதைக் கண்டுதான் மேனாட்டினர், சிறந்த ரகங்களையும், நாள்பட உழைக்கும் முறையிலும், குறைவான உழைப்பிலும், சிலவிலும் அதிக உற்பத்தி செய்து மக்களின் சுயதேவையைப் பூர்த்திசெய்யவல்லது மில்கள் என கண்டுபிடித்தனர்.

இதே நிலையில் உலகில் உள்ள எல்லா நாடுகளும் பின்பற்றி தன் நாட்டுமக்கள் தேவையைப் பூர்த்தி செய்வதோடல்லாமல், வெளிநாட்டிற்கு ஏற்றுமதிசெய்து பொருளாதாரத்தை அதிகப்படுத்துகின்றனர், ஆனால் நம் நாட்டிலோ, காந்தியாரே உயிர்விடும்வரை உபதேசம்செய்து, மாகாண சர்க்காரும், கார்ப்பரேஷன் முனிசிபாலிடிகள ,நிதிநிலைமை இடந்தராமலிருந்தாலும், ஏராளமான பணத்தைக்கொட்டி கதரை வாங்கி ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்குஅளித்துஉயிர் ஊட்டியும்வருகின்றனர். இந்நிலையிலும் வளர்ச்சி பெறவில்லை என்பது தெளிவானது! காங்கிரஸ்காரர்களாவது உண்மையுடன் கதராபிமானம் உடையவர்களாக இருக்கிறார்களா என்றால் அதுவுமில்லை. ஒரு காங்கிரஸ் பக்தர் வெளியில் போகும் போதாவது, மந்திரியைப் பார்க்கப்போகும் போதாவது, மேடையேறி திராவிடா இயக்கத்தைப்பற்றி பேசும் போதுதான் கதர் அணிந்திருப்பார். வீட்டிலோ சர்வம் மில்மயம்! இன்று கதர் துணி உடுத்துபவர்கள் கள்ளமார்க்கெட் பேர்வழியாகவோ (ஏனெனில் அவர்தான் கொள்ளையடிப்பதில் வாங்க முடியும்) மக்களை ஏமாற்றித் திரிந்துகொண்டிருப்பவர்களாகவோ இருப்பார்கள். இப்படிப்பட்ட நிலையில் உள்ள கதருக்குப் பாதுகாப்பு அளிக்க மத்திய சர்க்கார் முனைந்து சட்டமியற்றி விட்டார்கள் பாராளுமன்றத்திலே இப்பொழுதுள்ள மில்கள் உற்பத்திச் செய்யும் ஜவுளிகளே நமக்குப் போதவில்லை என்பது வெட்ட வெளிச்சமானது. இது தெரிந்திருக்க கைராட்டை உடையைப் பூர்த்தி செய்யும் என்பதுஇரவில் மின்னலை நம்பி வழிப்பிரயாணம் செய்வது போன்ற நிலையை ஒக்கும். இப்படிப்பட்ட பிற்போக்கான திட்டங்களுக்கு கோடிக் கணக்கில் பணம் செலவு செய்வதை விடுத்து, விஞ்ஞான முறையில் கண்ணோட்டம் செலுத்தும்படி கனம்கள் கேட்கப்படுகிறார்கள்.

## சென்னை மாகாணத்திற்கு மைலோ

சென்னை, டிச. 21—

சென்னை ராஜியத்திற்கு 9550 டன் மைலோ நாளை கொச்சி துறைமுகத்தில் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படும், எஸ். எஸ். ஏராடோ கப்பலில் வந்து சேரவிருக்கிறது. அந்த மைலோவை சென்னை சர்க்கார் பின் கண்டவாறு ஒதுக்கியுள்ளனர்.

கோயம்புத்தூர் 2200 டன். மதுரை 800 டன், வட ஆற்காடு 500 டன், ராமநாதபுரம் 1800 டன், சேலம் 1100, தென்னாற்காடு 300 டன், நீலகிரி 150 டன், திருச்சிராபள்ளி 1100 டன், திருநெல்வேலி 1800 டன். செங்கற்பட்டு 300 டன்.

---

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-I.